1979 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்லலாம். இரண்டுபேரில் யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். பதில் அளிக்கின்ற உரிமை அமைச்சரிகளின் பேரவைச் செயலர் களுக்கு இருக்கிறது. அதற்கு விதியும் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : விதி எங்கே இருக்கிறது? ஏற்கெனவே இருக்கின்ற நம்முடைய ரூலில் அப்படி கிடையாது. ரூல் இருக்கிறது என்றால் எப்போது திருத்தினீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Rule 2 (m); "Minister" includes any Deputy Minister or Parliamentary Secretary to whom a Minister may delegate his functions" என்று இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : நீங்கள் பார்லிமென்ட் விதியைப் படிக் கிறீர்கள்; நம்முடைய விதியில் எங்கே இருக்கிறது? நம்முடைய விதியை இன்னும் திருத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய பேரவை விதிகள்தான்.

(3) தகவல் கோரல்

(அ) துணைக் கேள்விகள் அதிகமாக அனுமதிப்பது குறித்து.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : சட்டமன்றத் தில் கேள்வி நேரம் மிக முக்கியமான ஒன்று. முக்கியமான கேள்விகளில் கூட எங்களுக்கு கேள்வி கேட்க உரிமை கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் கேட்கும்போது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இருக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட கேள்வியில் துணைக்கேள்விக்கு நீங்கள் என்னுடைய கவனத்தை ஈர்க்கவில்லை. என்னுடைய கவனம் ஈர்க்கப்பட்டிருந் தால் நிச்சயமாக உங்களுக்கு அனுமதி அளித்திருப்பேன். வினாக்கள்-விடைகள் பகுதிக்கு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ஒரு மணி நேரம் தான். அதற்குள் நான் கேள்விகளை முடிக்க வேண்டும், சரியாக 10.00 மணி ஆகிவிட்டதால் நான் அடுத்த நிகழ்ச்சிக்கு வந்துவிட்டேன். தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த கேள்வி நேரத்தில் தான் மக்களுடைய முக்கியமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டியிருக்கிறது. அதனால்தான் அத்தனை அங்கத்தினர்களும் இங்கே இருக்கிறார்கள். முக்கியமான கேள்விகளுக்கு, நேரம் இல்லாவிட்டாலும், தங்கள் அனுமதி அளிக்க வேண்டும். இதற்கு முன்னால் அனுமதி அளித்திருக்கிறீர்கள். தங்களுடைய தீர்ப்பைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. தயுவுசெய்து இந்தக் குறிப் பிட்ட கேள்வியில் இன்னும் சில துணைக் கேள்விகளுக்கு அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு முன்னால் இருந்த வழக்கத்தை நான் மாற்றியிருக்கிறேன். சரியாக 10.00 மணிக்கு கேள்வி நேரத்தை முடித்துவிட்டு, மீதி கேள்விகள் இருந்தால் அதற்கான பதிலை அவைக் குறிப்பில் அச்சிட்டுக் கொள்ளும் முறையை இப்போது கையாண்டு வருகிறேன். கடந்த சில நாட்களாக அப்படித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கியமான கேள்வி என்று நீங்கள் கருதி, என்னுடைய கவனத்தை உரிய நேரத்தில் ஈர்த்திருந்தால் நிச்சயமாக அனுமதி தந்திருப்பேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, கடைசியாக நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில்கூட 10.00 மணிக்கு கேள்வி நேரத்தை முடித்து விடுவேன் என்று சொன்னீர்கள். அப்போது நாங்கள் முக்கியமான கேள்விகளாக இருந்தால் ஏற்கனவே உள்ள வழக்கத்தை கையாளலாம் என்று சொன்னோம். ஏற்கெனவே இருக்கிற வழக்கத்தின்படி 10 அல்லது 15 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுக்கலாம் என்று ஆலோசனை சொன்னோம். தாங்களும் அதைப் பரிசீலிக்கலாம் என்று சொன்னீர்கள். ஆகவே, அந்த வகையில் தங்களுடைய தீர்ப்பை சற்றுத் தளர்த்தி, வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : என்னைப்போன்ற புதிய அங்கத்தினர்களுக்கு துணைக் கேள்விகள் கேட்கத் போதுமான வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். என்னுடைய கவனத்தை சரியான முறையில் ஈர்த்திருந்தால் துணைக் கேள்விக்கு வாய்ப்பு அளித்திருப்பேன். இனிமேல் ஏற்கெனவே இருந்த வழக்கத்தின்படி, தேவைப்பட்டால் 5 அல்லது 10 நிமிடங்கள் நீட்டித்துக் கொள்கிறேன். இப்போது வேறு நிகழ்ச்சிக்கு வந்துவிட்டதால் நாளையிலிருந்து அந்த முறையைக் கடைப்பிடிக்கிறேன்.

(ஆ) விவசாயிகளுக்கு மின்—இணைப்புத் துண்டிப்பு குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் மின் துண்டிப்பை எதிர்த்து நாங்கள் எல்லாம் எங்கள் கட்சியின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், காங்கிரஸ் கட்சியினரும் வெளிநடப்பு செய்தோம். இப்போது சேலம் மாவட்டத்தில் மறுபடியும் மின் துண்டிப்பை எதிர்த்து, பலர் கைதாகி இருக்கிறார்கள். ஆர்பாட்டங்கள், கிளர்ச்சிகள் அங்கே தொடர்ந்து நடைபெறுகின்றன. அரசு சலுகை அறிவித்து இருக்கிறது, 3 வருஷ தவணைகளை 3 வருஷங்களில் கட்டலமே என்று அறிவித்தும், இந்த அறிவிப்பு வருவதற்கு முன்னால